ISSN : *2456-821X* **Vol. 5 Issue 2 Dec 2021**

புதிய அவையம்

SACRED HEART COLLEGE

SACRED HEART RESEARCH PUBLICATIONS

---

## அறநூல்களில் மலரின் வழியே அறியலாகும் மனிதப் பண்புகள்

**ஆ. விண்ணரசி**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்.

---

### முன்னுரை

தனிமனிதன் நலன் மற்றும் சமுதாய நலன் கருதி தோன்றிய அறநூல்களில் பகுக்கப்படும் ஒழுக்க விதிகள் மூலமாக சமூகம் தன்நிறைவு பெறுகிறது. அறநூல்களில் அறக்கருத்துகள் தனிமனிதப் பண்பை உயர்த்திக்கொள்ள உதவுகின்றன. தனிமனிதன் வாழ்வில் தவிர்க்க வேண்டிய குணங்களைக் களைந்திட்டால் ஏற்றம் பெறலாம். அறநூல்களில் மலர்களை ஒப்புமையாகக் கூறும் நற்பண்புகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### மணம் வீசும் மலர்கள்

மனித வாழ்க்கையில் மனதை வசீகரப்படுத்தும் மலர்களை அணிந்து மகிழ்கின்றனர். கடவுளுக்குப் படைப்பதில் தூய்மையான பொருளாக இன்றளவும் பயன்படுகின்றன. பூவினை வண்டு மொய்க்கும் முன்பே அதனைப் பறித்து கடவுளுக்குப் படைத்து இறைவன் ஆசியை பெறுகின்றனர். பூக்களின் நறுமணம் ஒன்றுக்கொன்று மாறுபட்டு வாசனை கொடுத்தாலும் மனிதனுக்கு உடலளவிலும், மனதளவிலும் நன்மையைத் தருவதாக அமைந்துள்ளன. ”போர்க்காலங்களில் மகளிர் பூ அணிந்து பொலியாமல் வருந்தினர். கணவனைப் பிரிந்து வாழும் தனிப்படர் மிகுந்த நிலையிலும் பூச்சூடிக்கொள்ளாமல் வாளா இருந்தனர். எனவே பூவெனப்படுவது மகிழ்ச்சி காலங்களில் இன்பத்தை மிகுவிக்கும் மங்களப் பொருளாயிற்று”.

மலரின் இன்றியமையாமை பற்றி அறநூல்களில் பல பதிவுகளைக் காண முடிகின்றன. மலர்களை ஒப்புமையாக வைத்து அறநூல்களில் நற்கருத்துகள் அதிகம் இடம்பெற்றுள்ளன.

மலர்களை இல்லறத்திற்கு எடுத்துக்காட்டாய்ப் பாரதிதாசன் தன்னுடைய குடும்ப விளக்கு என்னும் கவிதை நூலில்,

”வீடு மலர்க்காடு

விருந்தினரும் வீட்டாரும்

பாடுகளி வண்டுகள்தாம்

பார்க்கத் தரும் காட்சி” (குடும்ப விளக்கு.பா.501)

வீடு மலர்க்காடாகவும், விருந்தினரும் வீட்டில் உள்ள அனைவரும் பாடிக் களித்து உண்ணுகின்ற வண்டுகளாகவும் நினைத்துப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மலர்கள் மணம் வீசிய பின்பு வாடிவிடும் தன்மை நட்புடன் ஒப்பிட்டு எடுத்துரைக்கப்படுகிறது. இதனை,

“சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூ மலர்ந்த

அன்றே மணமுடைய தாம்“

(நன்னெறி. பா.39)

கொடியில் பூக்கின்ற பூக்கள் மலர்ந்த நாளில் மணம் தந்து பின்பு அழியும். அதுபோல் கல்வியறிவு இல்லாதவர்களுடன் இணைந்த நட்பு தீங்கு தரும் என்று மலருக்கு ஒப்பிட்டு உரைக்கப்படுகிறது.

மலரின் வழியே உணரும் இன்பத்தை நான்மணிக்கடிகையில் குறிப்பிடும் செய்தியினை,

“மோந் தறிய எல்லா மலர்களும் நோக்குள்ளும்“

(நான்மணிக்கடிகை. பா.78)

இனிய சுவையினை நாக்கினால் சுவைக்கலாம். “பூவின் வாசணையை அடிப்படையாக வைத்து 1873 ஆம் ஆண்டில் டெல்பினோ (Delpino) என்ற தாவரவியல் வல்லுநர் ஐந்து வகையாகப் பிரித்திருக்கிறார். 1. இன்டோளாய்டு மணங்கள் 2. அமினாய்டு மணங்கள் 3. பென்ஸோபோய்டு மணங்கள். 4. மெழுகு மணங்கள் 5. டார்மினாய்டு மணங்கள் இந்த மணங்கள் பூக்கும் தாவர வகைகளில் அடங்கும். என்று ப்ரியா ராமசாமி குறிப்பிடுகிறார். மூக்கினால் நறுமணத்தை முகர்ந்து பார்த்து அனுபவிக்க முடியும். அழகுமிக்க

பொருட்களைக் கண்களினால் கண்டு மகிழலாம் என்ற கருத்தை விளக்குகிறார். மனிதர்களின் குணங்கள் பிறர் பயனடையும் வகையில் அமைவதே சிறந்த பண்பாகும்.

குடும்ப விளக்கு நூலில் மலரை வீட்டிற்கு ஒப்பிட்டு உயர்த்தி சொல்லப்படுகிறது. நன்னெறி பாடலில் கல்வியறிவு இல்லாதவருடன் நட்பு கொண்டால் தீங்கைத் தரும் என்று தாழ்த்தி ஒப்பிடப்பட்டுள்ளது. நான்மணிக்கடிகையில் மனிதர்களின் குணங்களுக்கு ஒப்பிட்டு உயர்த்திக் கூறப்படுகிறது. மலரின் வாசனை போன்றே மனிதப் பண்புகளும் மாறுபடுகிறது என்பதை ஆய்ந்துணர முடிகிறது.

ஆம்பல் மலரும் அழகுணர்வும்

ஆம்பல் நீரில் வளரும் கொடியும் இரவில் மலர்ந்து காலையில் குவியும் மலராகும். சங்க இலக்கியத்தில் பல பதிவுகள் ஆம்பல் பற்றியுள்ளன. மருத்துவ குணம் நிறைந்தவை அகன்ற இலைகளையும் குழல் போன்ற தண்டினையும் கொண்டது. நீர் வற்றிப்போனால் காய்ந்து போகும். நீரின் வரத்தைப் பெற்றதுடன் மீண்டும் தழைத்துக்கொள்ளும் ஆற்றல் பெற்றது. “பெண்யானையின் காதைப் போன்ற இலையினையும் கொக்கு போன்ற கூம்பிய அரும்பினையும் அதற்கேற்பத் திரண்ட தண்டினையும் கொண்டு விடியற்காலத்தே வானில் தோன்றும் வெள்ளியைப் போலப் பொய்கையில் ஆம்பல் மலர்ந்து விளங்கும்” என்று சங்க இலக்கிய பொருட்களஞ்சியம் பொருளுரைக்கிறது. ஆம்பலை ஒப்பிட்டுக் கூறும் கருத்துரையும் அறநூல்களில் அமைந்துள்ளன. இதனை,

”தாம்தீயார் தந்தீமை தோற்றாரால் ஆம்பல்”

(பழமொழி நானூறு. பா. 130)

ஆம்பல் பூக்களின் மணம் திருமண வீட்டில் கமழுவது போல இருக்கின்றனவோ அதைப்போலவே தீயவர்களும் பழிபாவங்களை உணராமல் தீயசெயல்கள் செய்து கொண்டிருக்கின்றனர். அந்தத் தீய செயல்கள் அம்பைக் காட்டிலும் கூர்மையாகச் சென்று அழிக்க வல்லது என்பதை உணர்த்துகிறது. ஆம்பலின் வாசணை போன்று தீயவரின் தீச்செயல்கள் அவருக்கே தீவினையைக் கொண்டுவரும் என்ற கருத்தை அறிந்திட இயலுகிறது.

பயிருக்குக் களையாக ஆம்பல் மலரினை ஒப்பிட்டு அறம் இழந்து பெறும் செல்வத்திற்கு நிகரானது என கருத்துரைக்கிறது. தேம்பாவணி பாடலில் இதனை,

”நோக்க விண்புள நுகரவொண் முளரியோ டாம்ப

னீக்க லாதெலா நீர்மலர் களையெனக் கட்ட“

(தேம்பாவணி பா.26)

ஆம்பல் மலராய் இருந்தாலும் பயிருக்கு களையாகக் கருதி பிடுங்கி எறியப்படும். அதனைப் போலவே அறம் இழந்து பெறும் செல்வம் கேட்டைத் தரும் என்கிற அறக்கருத்தை வெளிப்படுத்துகிறது.

ஆம்பல் மலரின் தன்மை கூடாத நட்புடன் ஒப்பிட்டுக் குறிப்பிடப்படுகிறது. இதனை நாலடியாரில்,

"விரிநீர்க் குவளையை யாம்ப லொக்கல்லா"

(நாலடியார் பா.236)

ஒரே குளத்தில் தோன்றி வளர்ந்து மலரும் தன்மைகொண்ட குவளை மலர்களைப் போல தேன் பெருக்கும் தன்மையை ஆம்பல் மலர்கள் ஒத்திருக்காது. இதனைப் பெருங்குணம் கொண்டோருடன் நட்பு கொண்டாலும் இழிந்த குணம் கொண்டவரின் செய்கைகள் வேறுபடும் என்பதை விளக்குகிறார். ஒரே குளத்தில் பூக்கின்ற குவளை மலர்கள் ஆம்பல் மலரின் தன்மையில் வேறுபட்டு இருப்பதைப்போல் சிறந்த குணமுடையவர்களின் நட்பும், நற்குணம் இல்லாதவர்களின் நட்பும் மாறுபட்டு இருக்கும் என்பவற்றைத் தெளிவாக அறிய முடிகிறது.

ஆம்பல் மலர் பூத்திருக்கும் காட்சி பெண்களின் உணர்வுகளுக்கு ஒப்பிடப்படுகிறது. இதனை,

"ஆம்பல்வாய் நறும்விரை யவிழ்த்து விள்ளிய

லாம்பல்வாய் மலர்ந்தன வணங்கை யாரினி"

(தேம்பாவணி பா.70)

பெண்களின் இதழ்கள் ஆம்பல் மலர் போன்றதாகும். இதழ்களிலிருந்து பிறக்கும் உணர்வுகள் நிலவொளியைப் போன்று காட்சியளிக்கும் என்று ஒப்பிட்டு மொழிவதை அறிய முடிகிறது.

ஆம்பலின் இலை, தண்டு, மலர் இவற்றை வர்ணிப்பதாய் அமைந்துள்ளது. பழமொழி நானூறு மலரின் மணத்தைத் தீயசெயலுக்கு தாழ்த்தி ஒப்பிட்டுள்து. தேம்பாவணி நூலில் ஆம்பல் மலரை களையாக, அறம் இழந்து தேடிய செல்வத்திற்கும் தாழ்த்தி ஒப்பிடப்பட்டுள்ளது. நாலடியாரிலும் ஆம்பல் மலர் இழிகுணம் கொண்ட நட்பிற்கும், பெண்ணின் இதழுக்கும் ஒப்பிடப்பட்டுள்ளது. ஒரே மலரை ஒப்பிட்டு மாறுபட்ட மனிதப் பண்புகளை எடுத்துரைக்கிறது.

குவளை மலரும் கனிவான பார்வையும்

குவளை மலரை வெள்ளை அல்லி என்று குறிப்பிட்டுள்ளனர். குளத்தில் பூக்கும் தாவரமாகும். ”சுனையின்கண் தழைத்த கரிய இதழ்களையுடைய குவளையின் முகை யவிழ்ந்த புறவிதழ் ஒடித்த முழுப்பூவாற் செய்யப்பட்ட தழையாடையை இடையில் அணிந்திருந்தனர்” என்ற செய்தியை சங்க இலக்கிய பொருட்களஞ்சியம் குறிப்பிட்டுள்ளது. அறநூல்களில் குவளை மலரினைத் திருடரின் காணிக்கைக்கு ஒப்பிட்டுக் கூறியுள்ளதை,

”பொன்யாத்துக் கொண்டு புகுதல், குவளைத்”

(பழமொழி நானூறு பா. 159)

பல நாட்களாய் அரசனுடன் தொழில்செய்து நேர்மை இல்லாமல் களவு செய்து வந்த பொருளால் உண்டு களித்து பின்பு அப்பொருளை அரசனுக்கு காணிக்கையாகப் படைக்கும் செயல் குவளை மலரைப் பறித்துத் தண்டின் நாரினாலேயே அப்பூக்களைக் கட்டுதல் போன்றதாகும் என்ற கருத்தினை எடுத்துரைக்கிறது.

பெண்மைக்கு ஒப்பாக ஒப்புமைப்படுத்திய வள்ளுவர் இதனை,

”காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்

மானிழை கண்ணொவ்வேம் என்று”

(திருக்குறள். 114)

பெண்ணின் கண்களைக் காண நாணம் கொண்ட குவளை மலர்கள் இவளுக்கு நிகராக நாம் இல்லையே என்று தலைகவிழ்ந்து நிலத்தை நோக்குவதாக பெண்ணின் அழகை வர்ணிப்பதாய் இக்குறள் அமைந்துள்ளது.

குவளை மலரின் அழகை நீரோடை காண விரும்பியதாக வர்ணித்துக் கூறும் தேம்பாவணி பாடலில்,

”கூடநின் றோடைதன் குவளைக் கண்டிறந்

தோடநின் றலைந்தலைந் தொருமித் தோரிடம்”

(தேம்பாவணி பா.61)

குவளை மலர் மலர்ந்த காட்சி நீரோடையைக் காண முடியாமல் வருந்தியது. அழகிய இதழ்கள் விரிந்த காட்சி கண்கள் திறந்து நீரொடையைக் காண முடியாமல் நின்றதைக் குறித்து வர்ணிக்கப்படுகிறது. இங்கு சோலைகளில் மலர்ந்துள்ள மலர்களின் எழிலை காட்சிப்படுத்துகிறது.

குவளை மலரின் தோற்ற அழகைப் பழமொழி நானூறு நூலில் திருடரின் காணிக்கைக்கு இழிவாக ஒப்பிட்டும், வள்ளுவர் பெண்மையின் அழகை குவளை மலருடன் உயர்த்தி ஒப்பிட்டுள்ளார். தேம்பாவணி நூலில் தோற்றத்தைக் காண விரும்பியதாக உயர்வாகவும் குறிப்பிட்டுள்ளது. இரண்டு நூலில் உயர்வாகவும், ஒரு நூலில் குவளை மலரைத் தாழ்வாகவும் எடுத்துரைத்துள்ளனர்.

**அனிச்சம் மலரின் மென்மை**

அனிச்சம் மலர் மிகவும் மென்மையான இதழ்களைக் கொண்டதாகவும், கதிரவன் தோன்றும் வேளையில் பூக்கின்ற தாவரமாகும். அற நூல்களில் அனிச்சம் மலரைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அனிச்சம் என்பதற்கு "முகர்ந்ததும் வாடிவிடும் (இலக்கியத்தில்) குறிப்பிடப்படும் மென்மையான மலர்: Delicate Flower அனிச்சை என்பதனை தன்னை அறியாமல் ஒரு செயலைச் செய்யும் தன்மை. That which is involuntary. கண் இமைப்பதும் ஓர் அனிச்சை செயல்தான்" என்று தற்காலத் தமிழ் அகராதி பொருளுரைக்கிறது.

அனிச்சம் மலரினை திருக்குறளில் பெண்ணிற்கு ஒப்பிட்டு உயர்வாக குறிப்பிடுகிறது. பெண்மையின் அழகையும் அனிச்சம் மலருக்கு ஒப்புமையாக எடுத்துரைக்கிறது. இதனை,

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"

(திருக்குறள். 90)

அனிச்சம் மலர் முகர்ந்த உடனே வாடிவிடும், விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று உணவளித்து மகிழ்விப்பதே சிறந்த விருந்தோம்பல். விருந்தினரை மாறுபட்டு பார்க்கும்பொழுது விருந்தினர் முகம் வாடிவிடும் என்று விருந்தோம்பல் பண்பினை வள்ளுவர் வெளிப்படுத்துகிறார்.

மேலும் அனிச்சம் மலரை பெண்ணின் மென்மையோடு ஒப்பிட்டுள்ளனர். இதனை,

"நன்னீரை வாழி, அனிச்சமே நின்னினும்

அமன்னீரள் யாழ்வீழ் பவள்"

(திருக்குறள். 1111)

அனிச்சம் மலரை வாழ்க என்றும் அதன் மென்மைத் தன்மையைத் தன் காதலியின் மென்மையான குணத்துடன் ஒப்புமைப்படுத்தி இருக்கிறார். அனிச்சம் மலரை விட

மென்மையானவள் என்பதை வெளிப்படுத்தி இருப்பதைக் காண முடிகிறது. பெண்ணின் மென்மையை மற்றொரு குறளில்,

"அனிச்சம்பூ கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு

நல்ல படாஅ பறை"

(திருக்குறள். 1115)

பூவைக் காட்டிலும் மென்மையானவள் என்பதை ஒப்பிட்டு உயர்த்தி உரைக்கிறார். அனிச்சம் மலரைக் காம்புடன் தலையில் அணிந்ததால் அதன் சுமையினைத் தாங்கக் கூடாமல் இடுப்பு ஒடிந்துபோகும். எனவே மங்கள ஒலி கேட்காது என்ற கருத்தினை உரைக்கிறார். அனிச்ச மலரின் நீண்ட காம்பு களையாமல் அணிந்ததால் இடை தாங்காது. அனிச்சம் பூ இயற்கையின் சீண்டல் மட்டுமே தாங்கிக்கொள்ளும் இயல்பு உடையது. முகர்ந்தாலே வாடிவிடும் இதைப்போலவே பெண்ணும் கற்பில் கறை படாமல் சிறந்து விளங்க அனிச்சம் மலரை ஒப்புமையாகக் குறிப்பிட்டுள்ளனர். பெண்மையின் மென்மைக்கு நெருஞ்சி முள் போல் அனிச்சம் மலரும், பறவையின் இறகும் உறுத்துவதாக அமைந்துள்ளது. இக்கருத்தினை இதே நூலில் (1120) மிக மென்மையான அனிச்சமும் அன்னப் பறவையின் இறகும் தன் காதலியின் பாதத்திற்கு நெருஞ்சி முள் போன்று உறுத்துவதாக ஒப்பிட்டு எடுத்துரைக்கிறது.

அனிச்சம் மலா் குறித்து கலித்தொகையில் அனிச்ச மலா்களால் கட்டப்பட்ட பூக்களை தலையில் அணிந்து மகிழ்ந்த செய்தியை,

"அரி நீர் அவிழ் நீலம், அல்லி, அனிச்சம்

புரி நெகிழ் முல்லை, நறவோடு, அமைந்த"

(கலித்தொகை.பா.91)

அனிச்சம் அல்லி, முல்லை ஆகிய மலா்களால் கலந்து கட்டப்பட்ட மலா்களால் தங்களை மேலும் அழகு செய்துகொண்டனா் என்று அறியப்படுகிறது. பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் மலரைக்கொண்டு தங்களை அலங்கரித்துக்கொண்டனா் என்பது தெரியவருகிறது.

பூவின் மென்மையைக் காட்டிலும் தன் காதலி மென்மையானவள் என்றுரைப்பது அறிந்துகொள்ள முடிகிறது. அனிச்சம் மலரை திருக்குறளில் விருந்திற்கு ஒப்பிட்டும் மென்மை தன்மை உடைய பெண் என்றும் சிறப்பித்து உயா்த்தி உரைக்கப்படுகிறது. அனிச்சம் மலரின் உணா்வுத் தன்மையைப் பெற்று விருந்தினரை உபசரித்து வாழும் மென்மை குணத்தைப் பெற்றிட அறிவுரை பெறப்படுகிறது. கலித்தொகைப் பாடலில் பெண்கள்

மட்டுமின்றி ஆண்களும் மலர்களால் தங்களை அலங்கரித்துகொண்ட செய்தியும் அறிந்திட முடிகிறது.

## முடிவுரை

மலரின் வாசனையை வைத்து பெயர்கள் அறிவது போன்று மனிதச்செயல் வழியே பண்பை அறிந்திடலாம். ஆம்பல், குவளை, அனிச்சம் மலர்கள் வழியாக சிறந்த வாழ்வை வாழ்வதும், சிறந்தவற்றை தலைமுறைக்குக் கடத்துவதும், அறிவு ஒழுக்கங்களில் ஈடுபட்டு தரத்தை உயர்த்திக் காட்டிடவும், அனிச்ச மலரின் மென்மை போன்ற விருந்தோம்பல் பண்பையும், தீய செல்வம், தீயவர் செய்கை கேடு தருவதையும், பூவின் மென்மைக்கு இணையாக பெண்மை பார்க்கப்படுகிறது என்பதையும் இக்கட்டுரையின் வழியாக ஆய்ந்துணர முடிகிறது.

## துணை நூற்பட்டியல்


1. சி. பாலசுப்ரமணியன்,
   மலர் காட்டும் வாழ்க்கை,
   நறுமலர்ப் பதிப்பகம்,
   பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை,
   சென்னை - 600 001.
   இரண்டாம் பதிப்பு, டிசம்பர், 1982.
2. ப்ரியா ராமசாமி,
   அறிவியல் அரட்டை,
   தாமரை பப்ளிகேஷன்ஸ், (பி)லிட்,
   சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேடர்,
   அம்பத்தூர் - 600 098.
   முதல் பதிப்பு, மே, 2006.
3. இரா. சாரங்கபாணி,
   சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம், (தொகுதி - 1)
   தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்,
   முதல் பதிப்பு, மார்ச், 2001.
4. ப. சந்திரசேகரன்,
   சுற்றுச்சூழல் பயில்வுகள்,
   டி.கே. பப்ளிகேஷன், புதுக்கோட்டை,
   பதிப்பு 2004.
5. ஆர்.எஸ். ராமகிருஷ்ணன்,
   க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி,
   சுதர்சன் கிராபிக்ஸ் (பி)லிட்,
   சென்னை - 600 017.
   பதிப்பு 2010.